| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>சரவணன் | அ.வ.எண். 187/2021 | 11.06.2025 |

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 1ம் பிரதிவாதி உங்கள் மனைவி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி உங்கள் மாமனார் என்றால் சரிதான். தற்போது நீங்களும், உங்கள் மனைவியும் ஒரே வீட்டில் தான் குடியிருந்து வருகிறீர்கள் என்றால் சரிதான். வழக்குரையில் உங்கள் மாமனாருக்கு ரூ. 12 லட்சம் கொடுத்ததாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். அதற்கு ஏதாவது ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது. அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

2. நீங்கள் வருமான வரி செலுத்தி வருகிறீர்களா என்றால் செலுத்துகிறேன். மேற்படி ரூ.12 லட்சம் உங்களுடைய வருவமான வரி கணக்கில் தெரியுமா என்றால் குடும்ப உறுப்பினருக்கு கொடுத்தால் அதில் சொல்லவில்லை. உங்களுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையில் ஆன ஒத்தி உடன்படிக்கையை பதிவு செய்துள்ளீர்களா என்றால் எனது மனைவி என்பதால் பதிவு செய்யவில்லை. கணவன், மனைவி என்பதால் பதிவு செய்யக்கூடாது என்று சட்டம் உள்ளதா என்றால் இல்லை. குடும்ப உறுப்பினர் என்பதால் பதிவு செய்யவில்லை.

3. மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய சட்டப்படி அருகதையில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் அதற்கு 10 மடங்கு தண்ட

தீர்வை செலுத்த வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் கணவன், மனைவி என்பதால் போலியாக மேற்படி ஆவணத்தை தயார் செய்து தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் வழக்குரையில் ஒரு கிராமத்தில் உள்ள சொத்தை விற்றதாக சொல்லியுள்ள நிலையில் எந்த கிராமத்தில் உள்ள சொத்து என்றால் திருவெறும்பூர் வட்டம், சூரியூர் கிராமம்.

4. மேற்படி கிரைய பத்திரத்தில் கிரைய தொகை குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். பிரதிவாதிகள் குடியிருந்த வீடு சம்மந்தமாக நீங்கள் வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்கள் தவறானது என்றால் சரியல்ல. வழக்குரையில் சொன்னது போன்று உங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையில் எந்த ஒப்பந்தமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் ஏற்படுத்தி கொண்ட உடன்படிக்கை பதிவு செய்யப்படாத உடன்படிக்கை என்பதால் அதனை சட்டப்படி செயல்படுத்த முடியாது என்பதால் அதற்கு மாற்று வழியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

5. இந்த வழக்கு சம்மந்தமாக நீங்கள் தாக்கல் செய்துள்ள மின் இணைப்பு, அடங்கல் ஆகியவை போலியானவை என்றால் சரியல்ல. இன்றுவரை என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது. நீங்கள் இன்று வரை வழக்கு சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.